DEREK PRINCE
MINISTRIES - INDIA



இலவச இதழ்!

தேவனுடைய வாக்குத்தத்தங்களின் தேசத்தில் நடை போடுதல்

- பகுதி இரண்டு

தேவனுடைய மன்னிப்பை பெறுதல்

இந்த தொடரின் மைய கருத்துக்கான என்னுடைய முந்தைய முன்னுரையில், "தேவனுடைய வாக்குத்தத்தங்களின் தேசத்தில் நடைப்போடுதல்" என்பதற்கான ஒட்டுமொத்த நோக்கத்தை நான் சுருக்கமாக உங்களுடன் பகிர்ந்துக்கொண்டேன். அந்த நோக்கம் என்ன? வேதத்தின் மாபெரும் வாக்குத்தத்தங்களை அடையாளம் கண்டு நம்முடைய வாழ்கைக்கு அவைகளை பயன்படுத்துவதே. இந்த தொடர் போதனையின் ஒவ்வொரு பகுதியிலும், நம்முடைய அன்றாட வாழ்வில் எழும்பும் பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது எப்படி என்பதை, செயல்முறையாக நான் உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறேன். அது, எப்படி நடக்கின்றது? தேவனுடைய வார்த்தையில் உள்ள குறிப்பிட்ட வாக்குத்தத்தங்களை சொந்தப்படுத்திக்கொண்டு, அவைகளை, நாம் வாழ்வில் சந்திக்கும் ஒவ்வொரு தடைக்கும் எதிராக பயன்படுத்துவதினாலேயே.

இப்போதனையில், நாம் காணப்போகிற பிரச்சனை “பாவம்" என்பதாகும். பாவத்தை குறித்து, ஒரு நீண்ட இறையியல் உறைக்குள் கடந்து போகாமல், இதை குறித்து நாம் எல்லோரும் அறிந்திருப்பதையே கூறுகிறேன். ஒவ்வொரு மனித ஜீவியின் ஆவிக்குரிய வாழ்வையும் பாதிக்கும் ஒரு அடிப்படை மனித குழப்பம் தான் பாவம். நாம் பாவம் செய்துவிட்டோம் என்ற உண்மையை, நாம் ஒவ்வொரு நாளும் எதிர்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அது மட்டுமல்ல, நாம் ஒவ்வொருவரும், “தேவன் என்னை மன்னிப்பார் என்பதை நான் எப்படி உறுதியாக அறிய முடியும்?" என்ற குழப்பமான கேள்வியுடனும் போராடுகிறோம்.

பாவத்தில் உண்மை

பாவத்தின் உண்மையை நேரடியாக ஒத்துக்கொண்டுத்தான் இந்த கலந்துரையாடலை நாம் ஆரம்பம் செய்ய முடியும். ஒவ்வொரு நபரும் பாவம் செய்திருக்கிறார் என்று வேதம் மிக தெளிவாக கூறுகிறது - பாவம் செய்யாதவர்கள் ஒருவருமே இல்லை. இக்கூற்று, சகல ஜாதி, மதம் மற்றும் பின்னணியின் ஜனங்களையும் உட்படுத்தும். மனிதர்களாகிய நம் எல்லாருக்கும் பொதுவாக இருக்கக்கூடிய ஒரு தன்மை இது. வேதமும் பாவத்தை குறித்து பேசுகையில், இந்த உண்மையை மிகவும் தெளிவுப்படுத்துகிறது.

1 இராஜாக்கள் 8:46ல் சாலமோன் பேசுகிறார். அவர் கூறுகையில்:

> *...பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே...*

அதே போல், ஏசாயா 53:6ல், தீர்க்கதரிசி கூறுகிறார்:

> *நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.*

“நாம் எல்லாரும்" மற்றும் “அவனவன்" என்ற வார்த்தைகள் எப்படி வலுவானதாக இருக்கிறது என்பதை கவனியுங்கள்.

நாம் எல்லாரும் வழித்தப்பி போய்விட்டோம்; நம்மில் அவனவன் தன் சொந்த வழியாக போய்விட்டோம். வழித்தப்பி திரிவதின்

WTTLOGP2 Tamil.indd 1 11/3/2017 9:57:32 AM

அர்த்தம் என்னவென்பதையும் கவனியுங்கள். விபச்சாரம் அல்லது கொலை போன்ற பயங்கரமான பாவங்களை செய்து விட்டோம் என்பதாக இருக்க தேவையில்லை. நம்மெல்லாரிலும் ஒரு பொதுவான குறை இருக்கிறது: நாமெல்லாரும், தேவனுக்கு நேராக அடங்காதவர்களாகவும், சுய-சித்தம் கொண்டவர்களாகவும், கீழ்படியாதவர்களாயும் இருந்துள்ளோம். ஏதோ ஒரு காலக்கட்டத்தில், தேவனுடைய வழியை விட்டுவிட்டு, நம்முடைய சொந்த வழியை பின்பற்றி செல்ல, நாம் தேர்வு செய்துள்ளோம்.

"பாவம் என்பது, நான் கணக்கொப்பிவிக்க வேண்டிய ஒரு தோல்வியாகும்"

புதிய ஏற்பாட்டில், ரோமர் 3:23ல், பவுல் இவ்வாறாக கூறுகிறார்:

எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி...

மறுபடியும், ஏதோ பங்கரமான குற்றம் செய்வதே பாவத்தின் அர்த்தம் அல்ல என்று இங்கு காண்கிறோம். மாறாக, தேவ மகிமையற்றவர்களாய் மாறுவதே அதின் அர்த்தம் என்று காண்கிறோம். பாவத்தின் இன்றியமையாத அர்த்தத்தை புரிந்துக்கொள்வது அவ்வளவு முக்கியமானது! இதற்கு நான் இப்படி விளக்கம் அளிப்பேன்: பாவம் என்பது, நான் கணக்கொப்பிவிக்க வேண்டிய ஒரு தோல்வியாகும்.

தேவனுடைய நிபந்தனைகளின் படி வாழ மறுப்பதே பாவமாகும். தேவன் நம்மை ஏற்படுத்தின நோக்கத்தை நிறைவேற்றாமல் போகுதல். அந்த நோக்கம் என்ன? அவருடைய மகிமைக்காக வாழ்வதே - ஒது ஒரு எடுத்துரைக்க முடியாத பாக்கியம்! நம்முடைய இறுதி நோக்கம், நம்முடைய சிருஷ்டிகருக்கு மகிமையை கொண்டு வருவதே. நாம் பாவம் செய்யும் போது, நாம் தேவனுடைய மகிமையை அவரிடமிருந்து திருடுகிறோம். எப்படி? நாம் உருவாக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றாததினால் தானே.

இந்த விளக்கத்தை உங்களால் புரிந்துக்கொள்ள முடிகிறதா? நாம் தேவனால் என்ன நோக்கத்திற்காக உறுவாக்கப்பட்டோமோ, அந்த நோக்கத்தை நிறைவேற்ற தவறுவதே பாவம். அந்த தவறுக்காக நாம் தான் முதன்மையான பொறுப்புடையவர்களாக இருக்கிறோம். என்னால் தவிர்க்க முடியவில்லை என்று நாம் சாக்கு சொல்ல முடியாது. நம்முடைய பாவத்திற்கு நாம் கணக்கு கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பாவத்தின் விளைவு

பாவத்தின் உண்மையையும், அதற்கான நம்முடைய பொறுப்பையும் நாம் உறுதி செய்துவிட்ட படியால், பாவத்தின் முன்கணிப்பை குறித்து பார்த்து நாம் இந்த தலைப்பை இன்னும் கொஞ்சம் ஆராய்வோம்.

முன்கணிப்பு என்பது ஒரு மருத்துவ பதமாகும். ஒருவருக்கு வியாதி இருந்தால், முதலாவது மருத்துவர் அந்த நோயை கண்டறிய வேண்டும் - அந்த நபரின் சரீரத்தில் அது இருப்பதற்கான அறிகுறிகளை கண்டடைய வேண்டும். அதை கண்டறிந்த பின், அந்த வியாதியின் முன்னேற்றமும், அதின் முடிவையும் மருத்துவர் கணித்து சொல்வார். அது தான் முன்கணிப்பு.

வேதாகமத்தில் பாவத்தின் முன்கணிப்பு மிக தெளிவாக கொடுக்கப் பட்டுள்ளது. நம்முடைய வாழ்வில் பாவம் இருந்தால், அதின் முடிவு என்ன? இந்த வியாதியின் இறுதி முடிவை குறித்து, பவுல் எந்த சந்தேகமுமின்றி, ரோமர் 6:23ல் கூறுகிறார்:

பாவத்தின் சம்பளம் மரணம்...

"சம்பளம்" என்ற வார்த்தை, நம்முடைய செயல்களின் அடிப்படையில் நாம் சம்பாதிக்கும் விளைவுகளை குறிக்கின்றது. செய்யப்பட்ட பாவங்களுக்காக ஒவ்வொரு நபரும் சம்பாதிப்பது என்ன? மரணம். இது மிக தெளிவாக, வலிமையாக, எளிதாக மற்றும் நிராகரிக்க முடியாத விதத்தில் கூறப்பட்டுள்ளது. இது ஒரு மாற்றமில்லா சட்டம்.

யாக்கோபு 1:13-15ல், பின் வரும் கூடுதலான ஒரு உட்பார்வையை பெறுகிறோம்.

சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவன வன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்.

இந்த பகுதியில், நம்முடைய தவறுக்காக, நாம் தேவனை குறை சொல்லக்கூடிய எல்லா வாய்ப்புகளுக்கும், யாக்கோபு மிகவும் ஜாக்கிரதையாக தடை விதிக்கிறார். அவர், "தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல" என்று கூறுகிறார். மாறாக நாம் சோதிக்கப்படும் போது, அது நம்முடைய சுய இச்சைகளின் காரணமாகவே நடக்கின்றது - நம்மை வசீகரமாக பாவத்திற்குள் இழுத்து செல்லும் நம்முடைய பொல்லாத வாஞ்சைகள். நாம் முன் பார்த்தது போல, இங்கும் பாவத்திற்கான முன்கணிப்பை மறுபடியும் காண்கிறோம். அந்த அதிகாரத்தின் 15ம் வசனத்தில், பாவத்தின் தொடர் பாதையும், அதின் தவிர்க்க முடியாத விளைவையும் யாக்கோபு விவரிக்கிறார்:

பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்.

இங்கு பாவம் ஒரு தொடர் பாதையை பின்பற்றி செல்வதை நாம் காண்கிறோம். நம்முடைய இச்சைகள், அல்லது பொல்லாத வாஞ்சைகளுக்கு நாம் இடமளிக்கும் போது, அது பாவத்தை உற்பத்தி செய்கிறது. அந்த பாவத்தை தொடர்ந்து செய்யும் போது, அது மரணத்தை உற்பத்தி செய்கிறது. மரணம் என்பது சரீரப் பிரகாரமான ஜீவனின் முடிவு மட்டுமல்ல என்ற எச்சரிப்பை நான் சகல உண்மையோடும் உங்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன். இந்த வசனம் எவ்வித மரணத்தை குறித்து பேசுகிறது என்று பார்க்கும் போது, இது தேவனிடமிருந்து நித்தியமாக பிரிக்கப்படும் ஒரு நிலையை குறிக்கும் வகையிலும் எழுதப்பட்டுள்ளது. ஆவிக்குரிய மரணம் - இந்த எல்லையை

எட்டிவிட்டால், அதிலிருந்து திரும்பி வர முடையாது.

ஆகவே, பாவம் என்பது ஒருவரின் வாழ்வில் செய்யக்கூடிய தொடர் செயல்களையும் அதின் முன்னேற்றத்தையும் இங்கு பார்க்கிறோம். ஒரு இச்சை (அல்லது தாறுமாறான வாஞ்சைக்கு) இடமளிப்பதில் ஆரம்பமாகிறது. இந்த இச்சைக்கு இடமளித்தல், பாவத்தை உற்பத்தி செய்கிறது. இந்த பாவம் தன் பாதையை நிறைவேற்ற இடமளித்தால், அது மரணத்தை உற்பத்தி செய்யும். இதுவே பாவத்தின் முன்கணிப்பாக இருக்கிறது.

பாவத்தின் பாரம்

இந்த போதனையின் ஆரம்பத்தில் நான் பேசின பரிகாரத்தை குறித்து நாம் பார்க்கும் முன், நம்முடைய வாழ்வில் பாவத்தினுடைய இன்னொரு முக்கிய விளைவை ஆராயலாம் - பாவத்தின் பாரம்.

பாவத்தின் இந்த அம்சம், சங்கீதங்களில் தாவீதினால் மிக விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அவன் உள்ளாக ஒரு நீதிமானாக இருந்தாலும், விழுவதென்றால் என்ன என்பதும், பாவம் செய்வதென்றால் என்ன என்பதும் தாவீது நன்றாக தெரியும். (நல்ல வேளை, மனந்திரும்புவது, தேவனிடம் திரும்புவது மற்றும் அவருடைய கிருபையை பெறுவதென்றால் என்ன என்பதும் அவனுக்கு தெரிந்திருந்தது). சங்கீதம் 32:3-5ல், தாவீது கூறும் வார்த்தைகள் இவை:

> *நான் அடக்கிவைத்தமட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று. இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ணகால வறட்சிபோல வறண்டுபோயிற்று. நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்.*

“என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்" என்ற அந்த கடைசி வாக்கியதுக்காக நாம் எல்லரும் தேவனுக்கு நன்றி சொல்ல முடியும் அல்லவா. ஆனால் தன் பாவத்தை அறிக்கை செய்யும் முன், தாவீதின் உணர்வுகளை பாருங்கள். அவர் சொல்லுகிறார், “என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று. என் உற்சாகமெல்லாம் உரிந்தெடுக்கப்பட்டது." பாவம் அவன் முழு ஆள்தத்துவத்தின் மேலும் ஒரு உணரக்கூடிய விளைவை ஏற்படுத்தினது.

தேவனோடு நேரடியாக பேசுகையில், தாவீது சங்கீதம் 38:3-4ல் இந்த வாக்கியத்தை எடுத்துரைத்தார்:

> *உமது கோபத்தினால் என் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை; என் பாவத்தினால் என் எலும்புகளில் சவுக்கியமில்லை. என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப் பெருகிற்று, அவைகள் பாரச்சுமையைப்போல என்னால் தாங்கக்கூடாத பாரமாயிற்று.*

இப்பொழுது அப்படிப்பட்ட உணர்வு தான் உங்களுக்கும் இருக்கிறதா? உங்கள் பாவம்-உங்கள் அக்கிரமம்-நீங்கள் தாங்கக்கூடாத பாரமாக இருக்கிறதா? உங்களுக்கு ஒரு நற்செய்தி உண்டு. அந்த பாவத்தின் பாரத்திலிருந்து நீங்கள் விடுதலை பெற்று, நிரந்திரமாக அதிலிருந்து விடுதலையாக இருக்கவும் ஒரு வழி உண்டு.

இரக்கத்தை கண்டடைதல்

நாம் இது வரை பாவத்தின் உண்மை, பாவத்தின் முன்கணிப்பு மற்றும் பாவத்தின் பாரத்தை ஆராய்ந்து விட்டோம். இப்போது நாம் நற்செய்திக்கு திரும்புவோம் - மன்னிப்பை குறித்த தேவனுடைய வாக்குத்தத்தங்கள். இப்படி செய்கையில், நாம் இரண்டு குறிப்பிட்ட வாக்குத்தத்தங்களை மட்டும் பார்க்க போகிறோம் : பழைய ஏற்பாட்டிலிருந்து ஒன்றும், புதிய ஏற்பாட்டிலிருந்து ஒன்றும்.

முதலாவது நீதிமொழிகள் 28:13ஐ பார்க்கலாம்:

> *தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.*

மேலே காணப்படும் முதல் வாக்கியமானது, தேவன் யோசுவாவுக்கு சொன்ன வாக்குத்தத்ததுக்கு நேர் எதிர்மறையானது. இந்த போதனை தொடரின் முதலாம் பாகத்தில் அதை குறிப்பிட்டிருந்தேன். தேவன் யோசுவாவிடம் சொன்னார், “நான் சொல்வதை நீ செய்வாயாகில், உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய். நீ செழித்திருப்பாய்." ஆனால் இந்த நீதிமொழி காண்பிக்கிறது போல, உண்மையான செழிப்பிற்கு ஒரே கடக்க முடியாத தடை இருக்கலாம்: பாவம்.

> **“பாவத்தை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்.”**

நாம் பாவத்தை அறிக்கை செய்து விட்டுவிட மனதில்லாமல் பற்றிக்கொண்டிருந்தால், அது நம்முடைய வெற்றிக்கான வழியை தடை செய்யலாம். “பாவத்தை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்." இதை மனதில் கொள்ளுங்கள். இது மிக முக்கியமான எச்சரிப்பு. ஆனால், அதே நேரத்தில், வாக்குத்தத்தம் செய்யப்பட்ட முன்னேற்றத்திற்குரிய விளைவையும் மனதில் கொள்ளலாம்: “அதை அறிக்கை செய்து

உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட செய்திமடல் வருமானால் இமெயில் முகவரி ***secretary@derekprince.in*** அல்லது அலைபேசி ***9585538202*** தொடர்புகொண்டு எந்த பெயரில், விலாசத்தில் பல செய்தி மடல்கள் வருகிறது என்பதை தெரியப்படுத்தவும்.

உங்கள் கவனத்திற்கு !!

உங்கள் விலாசம் மாறும்பொழுது தயவு செய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்

WANT MORE?

- ◯ ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்------பிரதிகள் தேவை.
- ◯ தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.
- ◯ முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்.

See over for address details...

ISSUE #011

SIGN ME UP!

◯ தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்களைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.

- ◯ ஈமெயில் மூலமாக அனுப்பவும்.
- ◯ கடிதம் மூலமாக அனுப்பவும்

விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்."

இரண்டு முக்கிய படிகள்

நீதிமொழிகளில் உள்ள இந்த வசனத்திலிருந்து நாம் மிக தெளிவாக காண்கிறது என்னவென்றால், நாம் இரண்டு முக்கிய அடிகள் எடுத்து வைத்தால், தேவன் நமக்கு இரக்கத்தை வாக்களிக்கிறார். அவைகள் என்ன? முதலாவது, அறிக்கை செய். இரண்டாவதாக, விட்டுவிடு. நாம் செய்த எல்லா பாவங்களையும், உண்மையாய் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

தேவனிடம் தங்கள் பாவங்களை அறிக்கை செய்யாவிட்டால், அவைகளை குறித்து தேவனுக்கு ஒன்றுமே தெரியாமல் போய்விடும் என்று நினைக்கின்ற அநேகம் பேரை நான் சந்தித்திருக்கிறேன். அது வேடிக்கையான கருத்து. நம்முடைய பாவங்களை தமக்காக தேவன் அறிக்கை செய்ய சொல்வதில்லை, நமக்காகவே நாம் பாவங்களை அறிக்கை செய்ய வேண்டும்.

நாம் பாவத்தை அறிக்கை செய்யும் போது - அதை வெளியரங்கமாக தேவனுக்கு முன் உண்மையாகவும், தாழ்மையுடனும் கொண்டு வரும் போது, நம்முடைய பாவத்தை எதிர்கொண்டு, அதிலிருந்து நம்மை விடுவிக்க, நாம் தேவனுக்கு வழியை திறந்து கொடுக்கிறோம். ஆனால் அதை நாம் பற்றிக்கொண்டு, அதை மறைத்து வைக்க முற்படும் வரை, நாம் தேவனுடைய மீட்பின் திட்டத்தை எதிர்க்கின்றோம். இதனால், அவருடைய இரக்கத்திலிருந்து, நம்மமையே துண்டித்துப்போடுகிறோம்.

இரண்டாவதாக நம்முடைய பாவத்தை நாம் விட்டுவிட வேண்டும். அதிலிருந்து நாம் திரும்ப வேண்டும். அந்த வழியில் தொடர்ந்து வாழாமலும், அந்த பாவங்களை தொடர்ந்து செய்யாமலும் இருக்க நாம் முடிவு செய்ய வேண்டும். இது நம்முடைய சுய சித்தத்தின் முடிவு. தேவனோடு, இந்த பரிமாற்றத்தில் நம்முடைய சித்தம் நிச்சயமாக ஈடுபட்டுள்ளது. தேவனால் ஏற்படுத்தப்பட்ட பாதையை பின் தொடர்ந்து செல்ல நாம் அறிந்து ஒரு தேர்வு செய்யாவிட்டால், நாம் தேவனுடைய இரக்கத்தை அனுபவிக்க முடியாது.

தம்முடைய வாக்குத்தத்தத்தின் படி செய்தல்

இப்போது புதிய ஏற்பாட்டில் உள்ள வாக்குத்தத்தை பார்ப்போம். இந்த வாக்குத்தத்தம் 1 யோவான் 1:9ல் உள்ளது:

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

பாவங்களை அறிக்கை செய்ய வேண்டும் என்ற தேவனுடைய நிபந்தனையை மறுபடியும் கவனியுங்கள். அந்த நிபந்தனையை நாம் நிறைவேற்றும் போது, நாம் தேவனை குறித்து கண்டடைகிற இரண்டு உண்மைகளை வேதாகமம் எடுத்துக்கூறுகிறது. முதலாவது, தேவன் உண்மையுள்ளவராக இருக்கிறார். இரண்டாவதாக, அவர் நீதியுள்ளவராக இருக்கிறார். இந்த இரண்டு உண்மைகளை புரிந்துக்கொள்வது நமக்கு மிகவும் முக்கியமாக இருக்கிறது.

வாக்குத்தத்தம் செய்த படியால், தேவன் நம்மை மன்னிக்க உண்மையுள்ளவராக இருக்கிறார். நாம் அவருடைய நிபந்தனைகளை நிறைவேற்றினால், அவர் ஒருபோதும் அந்த வாக்குத்தத்ததிலிருந்து பின் வாங்க மாட்டார். தேவன் நம்மை மன்னிக்க நீதியுள்ளவராகவும் இருக்கிறார், ஏனென்றால், நம்முடைய எல்லா பாவங்களுக்கான தண்டனையையும், அவர் ஏற்கெனவே இயேசுவில் நிறைவேற்றி விட்டார். இயேசு சிலுவையில் தொங்கி மரித்த போது, முழு மனுகுலத்தின் பாவத்திற்கான பூரணமான மற்றும் இறுதி தண்டனையை அவர் செலுத்தி விட்டார். ஆகவே நாம் தேவனுடைய நிபந்தனைகளை நிறைவேற்றினால் - நாம் அறிக்கை செய்து, மனந்திரும்பி, தேவனிடம் திரும்பினால், தேவன் தம்முடைய தெய்வீக நீதியில் எந்த சமரசமும் செய்யாமல், நம்மை முழுமையாகவும், இறுதியாகவும் மன்னிப்பதற்கான வழியை திறந்து கொடுக்கிறோம்.

நாம் செய்ய வேண்டியது என்ன?

நாம் பாவத்தின் தன்மை மற்றும் மன்னிப்பின் வாக்குத்தத்தை குறித்து கண்டடைந்த யாவற்றுக்கும், மறுமொழியாக செய்ய வேண்டியது என்ன? அதை மிகவும் எளிமையாகவும், தெளிவாகவும் நான் உங்களுக்கு சொல்லுகிறேன். நாம் மூன்று அடிகள் எடுத்து வைக்க வேண்டும். முதலாவது, நாம் பாவத்தை அறிக்கை செய்ய வேண்டும். இரண்டாவதாக, நாம் பாவத்தை விட்டுவிட வேண்டும். மூன்றாவதாக, விசுவாசத்தினால் நாம் தேவனுடைய மன்னிப்பை பெற வேண்டும். அப்படி செய்கையில், தேவன் வாக்குத்தத்தம் செய்ததை நிறைவேற்றுவார் என்ற விசுவாசத்துடன் அதை செய்ய வேண்டும். அறிக்கை செய், விட்டுவிடு, பெற்றுக்கொள்.

இந்த சத்தியங்களுக்கு பதில் கொடுக்கும் விதத்தில், அந்த அடிகளை இப்போது எடுப்பீர்களா? பின் வரும் ஜெபத்தை நீங்கள் செய்யும் போது, உங்களை கீழே இழுத்து, உங்கள் ஆவிக்குரிய பெலனை உரிந்துக்கொண்டிருக்கும் அந்த பாவம், கடந்த காலத்தின் ஒரு நிகழ்வாக மாறலாம்:

ஆண்டவராகிய இயேசுவே, இந்த குறிப்பிட்ட பாவத்தை நான் உம்மிடம் அறிக்கை செய்கிறேன். அது உம்முடைய பார்வையில் பாவம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதை முழுவதும் விட்டுவிடுகிறேன். இப்போதே நான் அதை தூக்கி எறிந்து, இனி அதை செய்யாதிருப்பேன். இப்போதும், இயேசுவில் உள்ள விசுவாசத்தின் மூலம், இந்த பாவத்திலிருந்து சுத்திகரிப்பை நான் உம்மிடம் பெற்றுக்கொள்ளுகிறேன். ஆமென்.

உங்கள் விபரம்

பெயர் ....

விலாசம்: ....

....

தொலைபேசி: .... பின்கோடு: ....

இமெயில்: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை: ₹

Derek Prince
Ministries - India

Contact us
www.derekprince.in
admin@derekprince.in
Ph 9585538202
1-C EVR Road,
3rd Floor,(Opp.
Chinthamani Mall),
Puthur, Trichy - 620017